# சுட்டி

98

மாத இதழ்

ஏப்ரல் '89

ரூ. 1.00




FREE E - BOOKS , www.thamizham.net.,

## "சாதிகள் இல்லையடி பாப்பா"

சாதிகள் இல்லையடி பாப்பா என்றார் மகாகவி பாரதியார். ஆம்! ஆனால் தமிழ்நாடு சட்டசபையில் ஒவ்வொரு சாதிக்கும் கிடைத்து இருக்கும் இடங்கள் – இதோ சாதி வாரியாகப் பட்டியல்:

| வ.எண் | சாதிகளின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் (தேவேந்திரகுல வேளாளர் 11 பேர் உட்பட) | 42 |
| 2. | வன்னியர் | 33 |
| 3. | முக்குலத்தோர் | 27 |
| 4. | கொங்கு வேளாளர் | 24 |
| 5. | இந்து நாடார் | 12 |
| 6. | கிறிஸ்துவநாடார் | 6 |
| 7. | முஸ்லிம்கள் | 11 |
| 8. | முதலியார் | 11 |
| 9. | பிள்ளைமார் | 9 |
| 10. | நாயுடு | 8 |
| 11. | ரெட்டியார் | 6 |
| 12. | உடையார் | 4 |
| 13. | யாதவரs | 4 |
| 14. | அருந்ததியர் | 3 |
| 15. | முத்துராஜா | 4 |
| 16. | செட்டியார் | 3 |
| 17. | பிராமணர் | 3 |
| 18. | இசை வேளாளர் | 2 |
| 19. | மலையாளிக்கவுண்டர் | 2 |
| 20. | குறும்பர் | 2 |
| 21. | சோழியர் வேளாளர் | 2 |
| 22. | வலையர் | 2 |
| 23. | மீனவர் | 1 |
| 24. | வேட்டுவ கவுண்டர் | 1 |
| 25. | குறும்பக் கவுண்டர் | 1 |
| 26. | விசுவகர்மா | 1 |
| 27. | நாயர் | 1 |
| 28. | படுவர் | 1 |
| 29. | மார்வாடி | 1 |
| 30. | நைனார் | 1 |
| 31. | லிங்காயத்து | 1 |
| 32. | சோழியார் | 1 |
| 33. | மூப்பர் | 1 |
| 34. | மூப்பனார் | 1 |

நன்றி:- தினப்புரட்சி; தொகுப்பு:- நா.கிருஷ்ணவேலு, புதுவை-3.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆடம்பரத் திருமணங்கள்

கலப்புத் திருமணம், சீர்திருத்தத் திருமணம் செய்பவர்கள் கூட, பல நேரங்களில், சிக்கனத் திருமணம் புரிவதில்லை.

ஏழை தேசம் என்று சொல்லிக்கொண்டு, மிகப்பெரிய பணக்கார நாடுகளில் கூட இல்லாத அளவுக்கு ஆடம்பரத் திருமண விழாக்களை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மரபு காரணமாகவும், மற்றவன் செய்கிறபோது தான் மட்டும் செய்யாவிட்டால் கஞ்சன் என்று பெயர் வருமே என ஊருக்குப் பயந்தும், ஆடம்பரமே தகுதியின் அடையாளம் என்று தவறாய்க் கருதிக் கொண்டும், மண விழாக்களில் வீண் செலவுகள் பெருகி வருகின்றன.

திருமண அழைப்பிதழ் அச்சடிக்கும் போதே ஆடம்பரம் தொடங்கி விடுகிறது. விதவிதமான வடிவங்களில், வண்ணவண்ண அட்டைகளில், ராட்சத அளவுகளில், அழைப்பிதழ்கள் நம்மை வரவேற்கின்றன.

திருமணத்திற்கு முதல் நாள் இரவே, மண்டபத்தை வண்ண விளக்குகள் அலங்கரிக்கின்றன. அதிலும் இந்த எலக்ட்ரானிக் உலகில், பல தொழில் நுட்ப உத்திகள் கையாளப்பட்டு, நம்மைப் பிரமிக்க வைக்கின்றன.

இரவில் வாண வேடிக்கைகளுக்கு ஆகும் செலவு யானையைக் கட்டித் தீனி போடுகிற விஷயம். அண்மையில், டெல்லியைச் சார்ந்த ஒரு பெரிய தொழிலதிபர், தன் மகளின் திருமண நாள் வாண வேடிக்கைகளுக்காக, ஒரு நண்பரை வாஷிங்டன் போட்டோமாக் ஆற்றங்கரையில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலைக்கு அனுப்பி, நூதனமான, புதிய வாண வெடிகளை வாங்கிவரச் செய்தாராம்.

அமர்க்களமான விருந்து-அடுத்த ஆடம்பரம். உண்பதை விட, இலைகளில் வீணாகும் உணவே மிகுதி. அடுத்த வேளைச் சோற்றுக்கு வழியில்லாமல் ஆலாய்ப் பறக்கும் மக்கள், இந்த ஆடம்பர வேடிக்கைகளைத் தொடர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று நம்ப முடியாது!

-பழநி



FREE E - BOOKS , www.thamizham.net.,

முதற்பரிசுபெறும் சிறுகதை

# குப்பைத்தொட்டி

-சூர்யபாலன்.

குப்பைகளைக் கிளறி காகிதம் பொறுக்கும் அவனுக்கு பெயர் என்று ஒன்று இல்லை. ஊரார் அவனைக் குப்பைத்தொட்டி என்றுதான் அழைப்பர். பசிக்காத் தன் வயிற்றை நிரப்பிக் கொண்டு குழந்தையைப் பெற்றெடுத்து குப்பைத்தொட்டியில் விட்டுச் சென்றதாக மற்றவர்கள் கூற அவன் அறிவான். குப்பைத் தொட்டியில் தவழ்ந்ததாலோ என்னவோ அவன் தொழிலும் குப்பை பொறுக்குவதாகிவிட்டது.

குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தவன் ஏதோ ஒரு காகிதப் பொட்டலம் கிடப்பதை அறிந்து பிரித்துப் பார்க்கிறான். அதில் உபயோகித்த நிரோத்தைப் பார்த்ததும் ஒரு கணம் அந்த இளம் மீசைக்குக் கீழே தோன்றிய குறுநகை; அது பற்றி அவன் அறிந்திருக்கிறான் என்றே தெரிகிறது. இந்த நிரோத்தை மட்டும் தனது முகம் தெரியாத தகப்பன் உபயோகித்திருந்தால் தனக்கு இந்த அவல வாழ்வு இல்லாதிருந்திருக்குமே என்று எண்ணியபோது முன்னெச்சரிக்கையில்லாத தன் தாய் மீது வெறுப்பு தோன்றினாலும், ஒரு நிர்கதியான இளம் பெண்ணை இந்தச் சமுதாயம் விட்டுவைக்காது என்பதை அறிந்தபோது அவள்மீது அவன் இரக்கம் கொள்ளவே செய்தான்.

அலைந்த கால்கள் சோர்ந்து போக, குப்பைகள் உள்ள கோணியில் சாய்ந்து நிலவையே பார்த்துக்கொண்டு பீடியைப் புகைத்துக் கொண்டிருந்தவன், "யோவ் வர்றியா" என்ற பெண்ணின் குரல் கேட்டு மெல்லத் திரும்பினான். அந்த நிலவொளியில் பிரகாசித்த கறுத்தமுகமும் செழித்த பருவமும் கண்டு சற்று தடுமாறவே செய்தான். மெல்ல உடலில் உஷ்ணம் பரவுவதை உணர்ந்தான்.

மெல்ல சுதாரித்து "ம் எவ்வளவு கேக்கிற" என்றான் "அஞ்சு ரூவா குடு. இன்னிக்கு ராத்திரி முச்சூடும் இருக்கிறேன்" என்று அவள் கூற, "சரி என்று எழுந்தவன்

இரு கடை வரைக்கும் போயிட்டு வர்றேன்" என்றதும்

எதுக்குயா கடைக்கு" என்றாள்.

நிரோத் வாங்கத்தான்"

எனக்கு வியாதி இருக்மோன்னு பயப்படுறியா? என்று அவள் கேட்க, இல்லை என்னைப்போல் இன்னொரு குப்பைத்தொட்டி உண்டாகக்கூடாதேன்னுதான் பயப்படுறேன்" என்றவாறு அணைந்துபோன பீடியைப்பற்றவைத்துக் கொண்டு கடையை நோக்கி நகர்ந்தான்.

FREE E - BOOKS , www.thamizham.net.,


# பட பதில்கள்

* தி.மு.க வின் வெற்றியைச் சிங்கள இதழ்கள் எப்படி எதிர் கொண்டன?




சிங்கள ஆதரவு இதழ் லங்கா கார்டியன்

* வீதியோரத்து இந்திய குழந்தைகளின் பாதுகாப்பு எப்படி?



புகைப்படம்: முகேஷ் பர்பியானி



FREE E - BOOKS , www.thamizham.net.,

இரண்டாம் பரிசு பெறும் நாடகம்:

# விழிகள் உதிர்க்கும் வியர்வைத் துளிகள்

அ. பெர்னாட்சா

தென்றலைக்கூட தாங்கும் சக்தியற்று தள்ளாடுகிறது. இற்று விட்ட ஓலைகளின் இடைவெளியில் கதிரவனின் ஒளிக்கதிர் பாய்ந்து குடிசைக்கு இலவச மின்வசதி செய்து கொடுக்கிறது.

**சுப்புதாயி:** என்னங்க! இன்னும் அறுப்புக்கு போகல! (வேலப்பன் மனைவி சுப்புத்தாயிக்கு வார்த்தைகளும் இருமலும் கூட்டணி அமைத்துக் கொண்டு வெளியே வருகின்றன.)

**வேலப்பன்:** எலே கண்ணத்தா! பரணிமேல இருக்கிற கருக்கரிவாள எடுத்துக்கிட்டு வாலே! சுப்புத்தாயி அறுப்பு முடிஞ்சு சாயங்காலமா வர்றேம்புள்ளே

**சுப்புத்தாயி:** என்னமோ இந்தத்தடவை ஆண்டவன் முகம்பார்த்து நம்ம அரைக்காணி நிலம் வெளங்கிடக்கு. இந்த வருசமாவது அரைவயித்து கஞ்சிக்கு வழி கெடச்சிரிக்கு

(மெல்ல எழுந்து சுவரில் சாய்ந்து கொள்கிறாள்.)

**வேலப்பன்:** நீ ஒண்ணும் கவலப்படாத புள்ளே, அறுப்பு முடுஞ்சதும் பாதி நெல்ல வித்துப்போட்டு உன்னைய டவுன் ஆஸ்பத்திரிக்கு கூட்டி போயி வைத்தியம் பார்க்கிறேன். அடே செல்லமுத்து வாடா வயலுக்கு!

மகனை அழைத்துக்கொண்டு வேலப்பன் வயலுக்குச் செல்கிறான்.

(நீண்ட நாளைக்கு பின்னாடி அரிசிச் சோறை நினைத்தவுடன் அப்பனுக்கும், மகனுக்கும் நாக்கு ஆர்ட்டீசியன் ஊற்றாகிறது. நெல்லை சாக்குகளில் அள்ளி கட்டினார்கள். ஓரமாக காய்ந்த இரண்டு படி நெல்லை செல்லமுத்து குவிக்கிறான்.

அப்போது அங்கே வில்வண்டியில் வந்து இறங்கிய வேட்டையப்பத்தேவர் மீசையை முறிக்கிக் கொண்டிருக்கிறான். பண்ணையாள் முனியாண்டி கை கட்டி பக்கத்தில் பவ்வியமாய் நிற்கிறான்.)

**வேட்டையப்பன்:** எலே வேலப்பா! என்னலே! சொல்லாம கொள்ளமா அறுப்பு வச்சுட்ட. எனக்கு நீ தரவேண்டிய வட்டி நெல்லு போன வருசமே பாக்கி நிக்குது.

**வேலப்பன்:** ஐயா, மன்னிச்சுருங்க போன வருசம் விளச்சல் இல்ல. அடுத்த வருசம் மொத்தமா தந்துர்ரேன். எம் பொண்டாட்டி வைத்திய செலவுக்குக் கூட இந்த நெல்லு பத்தாதுங்கய்யா

**வேட்டையப்பன்:** வாங்கின கடனக் கொடக்க வக்கில்லாத உங்களுக்கெல்லாம் எதுக்குடா வாழணும்கிற ஆசை. முனியாண்டி நெல்லை மூட்டை எல்லாத்தையும் வண்டியில ஏத்து. ஓரத்திலே குமிச்சு வச்சுருக்கிற அந்த நெல்லையும் சேர்த்துக் கட்டு

**வேலப்பன்:** ஐயா, ஐயா, ராவு கஞ்சிக்கு காய வச்ச நெல்லுங்கய்யா. அதையாவது போட்டுட்டு போங்கைய்யா. உங்க காலப்புடுச்சு கெஞ்சிக் கேக்கிறேன்.

(குனிந்த வேலப்பனை தெட்டித்தள்ளிவிட்டு வண்டியில் ஏறிப்புறப்படுகிறார் வேட்டையப்பத் தேவர். அப்போது வேலப்பன் மகள் கண்ணத்தா கையில் பையுடன் வேகமாக ஓடி வருகிறாள்.)

**கண்ணாத்தா:** அப்பா, ஆத்தா, காயப்போட்ட நெல்ல அள்ளிக்கிட்டு வரச் சொன்னுச்சு (வேலப்பன் விழிகளில் மலர்ந்த நீர் முத்துக்கள் நெற்றியில் வழிந்த வியர்வையுடன் கலந்து கண்ணாத்தா கரங்களில் விழுந்து சிதறுகிறது.)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நடிப்பு

நடிப்பில் முகபாவம்தான் மிகவும் முக்கியமானது. முகபாவம் என்பது உப்பு மாதிரி; கூடினாலும், குறைந்தாலும் கேடு செய்யும்.

முகபாவத்தைப் பெரும்பாலும் கண் அசைவுகளும், நெற்றிச் சுருக்கங்களுமே கொண்டு வருகின்றன. காதல், கோபம் முதலான நவரசங்களையும், தேர்ந்த கலைஞன், கண்களாலேயே காட்டிவிடுவான். ஆகவேதான், பாரதி கூட, 'கண்ணிலே நல்ல குணம்' என்று சொன்னான். 'திருட்டு முழி' என்பது இன்னும் பேச்சு வழக்கில் உள்ள தொடர்.

நம் தமிழ்ப்படங்களில் முகபாவத்தைச் சரியாகவும், பல நேரங்களில் மிகையாகவும் காட்டுகிறவர் சிவாஜி கணேசன். ரஜனிகாந்தும் அந்த ரகம்தான். தனக்குப் பின்னால் வந்த பல நடிகர்களிடமும், தன்னுடைய மோசமான பாதிப்பை சிவாஜி ஏற்படுத்தியுள்ளார்.

தேவையான அளவிற்குக் கூட முகபாவங்களைக் காட்டாத நடிகர் எம்.ஜி.ஆர்! குறிப்பாக, சோகக் காட்சிகளில், தன் முகத்தை மூடிக் கொண்டு, நடிப்பதிலிருந்து தப்பிவிடுகிற சாமர்த்தியம் அவரிடம் உண்டு.

கமல், சிவகுமார், லட்சுமி, ராதிகா முதலான பல நல்ல நடிகர்களும் கூட, சில வேளைகளில் 'மிகைப்படச் செய்தல்' என்னும் விமர்சனத்திலிருந்து விடுபடவில்லை.

நடிப்பு என்று தோன்றாமல், இயல்பாய்த் தெரிகிறவர்களில் அர்ச்சனாவையும், மறைந்த நடிகர் முத்துராமனையும் குறிப்பிடலாம்!

திரைப்படத்தில் மற்ற எல்லாத் துறைகளையும் விட, நடிப்புத் துறைக்கே கூட்டம் அலைமோதுகிறது. பணமும், புகழும் நடிகர்களிடம் வந்து குவிவதே அதன் காரணம். இப்படி தேவைக்கு மிஞ்சிய பொருளும், திறமைக்கு மிஞ்சிய புகழும் வந்து சேர்வதால், சமூகத்தில் நடிகர்களின் மதிப்பு உயர்ந்து கொண்டும், நடிப்பின் மதிப்பு தாழ்ந்து கொண்டும் இருக்கிறது.

– வசந்தா

(அடுத்த இதழில் வெளிவரும் 'இயக்கம்' பற்றிய விமர்சனத்துடன் இத்தொடர் முடிவடைகிறது)



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுதீரின் மிகச் சிறந்த கேலி சித்திரங்கள்




"ஆமா... ஆமா நீங்க என்னை நம்பலாம்"










நன்றி: The Best of this is it by Sudhir Dar, Rupa, 1988)

FREE E - BOOKS , www.thamizham.net.,

## வாசகர் எதிரொலி

* அரசியல் கோமாளி பாக்யராஜிடம் 'இருப்பதும் இல்லாததும்' என வரிசைப்படுத்தி சுப. வீரபாண்டியன் அவர்கள் நல்ல சவுக்கடியைக் கடந்த இதழில் தந்திருந்தார். சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வரும். பாக்யராஜ் போன்ற 'பபூன்'களிடம் நாம் எதிர்பார்ப்பது தவறுதான்.

- எம்.பி. இளங்கோ, பி.மேட்டுப்பாளையம்

* வாழும் காலத்தில் வசைபாடுபவர்கள், இறந்த உடனே இரங்கற்பா எழுதி புகழ்பாட ஆரம்பித்து விடுவார்கள். இதுதான் அரசியல். எம்.ஜி. ஆருக்கு முதல்வர் சமாதி கட்டுவதும் மேற்கண்ட நாகரிகத்தில் தான்.

- எம்.பி.ஏ. மது, ஹைதராபாத்

* மார்ச் இதழில் கவிதை மிராசுகளும் கவிப்பெரும் பண்ணையார்களும் என்ற கட்டுரை படித்தேன். அறிவுத் துறையைச் சார்ந்தவர்களின் அறியாமையை நேர்மையுடன் அணுகி விமர்சித்துப் புத்தி சொல்லியிருக்கிறீர்கள். தேவையான கட்டுரை. சம்மந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

- வி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.

* பெரிய மனிதர்களின் சின்னபுத்தி என்ற தலைப்பு ஏ.வி.எம் நிறுவனத்தார்க்குப் பொருந்தும்!

- வேளாதாசன், முருங்கப்பேட்டை

* சீனா-வராத செய்திகள் என்ற கட்டுரையில் இதுவரை வராத அந்தநாட்டின் சிறப்புச் செய்திகளை அறிய முடிந்தது. பயனுள்ள கட்டுரை. பாராட்டுகள்

- வீர. அருள்நாதன், பொதக்குடி

* கவிதா பாரதியின் 'உடையுமா தொட்டிகள்' கவிதை நயம் நெஞ்சை நெருடி மனசைக் கிள்ளியது. தொட்டிகள் உடையாவிட்டால் நாளை உடைக்கப்படும் என்பது போல் அமைந்துள்ளது.

-ந.சோ. சிங்காரவேலு, நாகப்பட்டினம்

## நண்பர்க்குப் பரிசாக சுட்டி

பிறந்தநாள், திருமணம் போன்ற விழாக்களுக்குப் பயனுள்ள பரிசு என்ன தருவது என்று குழம்புகிறீர்களா? பரிசுக்குரிய பொருள் சுட்டி இருக்க கவலை ஏன்? பரிசுக்குரியவரின் பெயர், முகவரி, விழா விவரம் குறிப்பிட்டு சுட்டிக்கு ரூ.12 பணவிடை (க.ச) செய்யுங்கள். அவருக்கு உங்கள் பரிசாக ஓராண்டு சுட்டியை அனுப்புவதோடு, உங்கள் சார்பாக வாழ்த்தையும் அனுப்பி வைக்கிறோம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# உடைந்த எழுத்தும் காக்கி காகிதமும்

மத்திய மாநில அரசு நிறுவனங்கள் பலவற்றின் காகிதங்களை கூடன் பர்க் அச்சு எந்திரம் கண்டுபிடித்த காலத்தில் வாங்கிய சாதனங்களில் தாம் இன்னும் அச்சு அடிக்கிறார்கள் போலும்!

யாரும் புரிந்துகொண்டு விடமுடியாதபடி எழுத்து தேய்ந்திருக்கும்; அல்லது மை அப்பியிருக்கும்; சில சமயம் இது என்ன மொழி என்று கண்டுபிடிக்க முடியாத அளவு உருவமற்ற கோடுகளோ, திட்டுத்திட்டான தடித்த புள்ளிகளோ காகிதத்தில் நெளியும்.

ஊரெல்லாம் அச்சுக்கூடங்கள் வேலையற்று காற்று வாங்குகின்றன. கண்ணில் ஒற்றிக்கொள்ளும் வண்ணம் நவீன அச்சமைப்புகள் மலிவாக வந்துவிட்டன. இவற்றையெல்லாம் நிராகரித்து, அசிங்கம் பிடித்த முறையில் குப்பையில் போட வேண்டிய அச்சு எழுத்துகளைப் பிடிவாதமாக பல அரசு நிறுவனங்கள் பயன்படுத்துவதன் இரகசியந்தான் என்ன?

அடிமாட்டு விலைக்கு "கொட்டேஷன்" தருபவர்கள் "ஆர்டர்" பெற்றால், சம்திங் போக, ஒப்புக்கு, அச்சடித்துத் தருகிறோம் என்று காகிதத்தைக் கறுப்பாக்கித் தருகிறார்கள்! கடன் எழவு வேலை பற்றி அரசு கவலைப்படாது!

அச்சுதான் இந்த லட்சணம் என்றால் பயன்படுத்தும் தாள், தட்டச்சுப் பொறி, உறை இவையாவது கௌரவமாக இருக்கிறதா? காகிதங்கள் வெளிர்சாணி நிறத்தில், நம்மைக் கேவலப் படுத்துவதற்கென்றே எங்குதான் சிறப்பு ஆர்டர் கொடுத்துத்தயாரிக்கப் படுகின்றனவோ? ஒரு துருப்பிடித்த தட்டச்சுப்பொறியில் மேலும் கீழும் குதிக்கும் எழுத்துக்களை இந்தக் காக்கி காகிதத்தில் துப்பியது போல பதிவாக்குகிறார்கள். இந்த அவலத்தை, ஏற்கனவே பயன்படுத்திய உறைகளின் மேல் வெள்ளைத்தாளை ஒட்டி அருவருப்பான முறையில் நமக்கு அனுப்புவார்கள். நம்மை ஏன் இப்படி அரசு நிறுவனங்கள் சிக்கனம் என்ற பெயரில் தண்டித்து அவமானப்படுத்த வேண்டும். இப்படியொரு கேவலமான பணக்கஷ்டம் அரசின் எழுது பொருள் துறைக்கு நிரந்தரமாகி எப்போதும் இருக்க வேண்டுமா?

கடல் போல் அரசுபணம் தவறான நிர்வாகத்திலும், அதிகாரிகள், அமைச்சர்கள் உல்லாசத்திலும் சீரழிந்து கொண்டிருக்க, தேவையான காரியங்களில் இப்படியொரு முட்டாள்தனமான போலி சிக்கனம் எதற்கு?

*எழில்*

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பிரச்சினையைக் கிளப்புகிறார் பேநசீர் புட்டோ



காஷ்மீர் பிரச்சனை மீண்டும் எழுப்பப்பட்டுள்ளது. சியாசின் பனியாற்றுப் பகுதி குறித்தும், காஷ்மீர் குறித்தும் அண்மையில், பாகிஸ் தானின் பிரதம மந்திரி பேநசீர் புட்டோ பேசியிருக்கிறார்.

காஷ்மீர் யாருக்குச் சொந்தம்? என்பது, ஜவஹர்லால் நேரு, ஜுல்பிகர் அலி புட்டோ காலத்திலிருந்தே இருந்து வருகிற பிரச்சனை. அவர்கள் காலத்தில் நடந்த சிம்லா மாநாட்டு ஒப்பந்தத்திற்குப் பிறகு, அது கொஞ்சம் ஓய்ந்தது. இப்போது மறுபடியும் அதே பூதம் கிளம்பியிருக்கிறது.

"காஷ்மீர்ப் பிரச்சினையை பொறுத் தமட்டில், நான் வல்லரசுகளிடம் உதவி கேட்கப் போவதில்லை. உதவி என்பது பெரும்பாலும் தலையீடாகவே உள்ளது" என்றும், "உலகத் தூதரகங்களிடையே நான் ஓடித் திரியப் போவதில்லை. ஏனெனில் 25 ஆண்டு காலமாக ஓடித்திருந்ததில் ஒரு பயனும் கிடைக்கவில்லை" என்றும் பேநசிரின் தந்தையார் புட்டோ குறிப்பிட்டதை, இரு நாடுகளும் கவனத்தில் வைத்துக் கொள்வது நல்லது.



சியாசின் பனியாற்றுப் பகுதியைப் பற்றி பேநசீர் எழுப்பியுள்ள பிரச்சினையும் முக்கியமானது. அப்பகுதி, இரண்டு நாடுகளின் கட்டுப்பாட்டிலும் இல்லாமல் தனித்தியங்கும் என்றே சிம்லா ஒப்பந்தம் செல்கிறது. ஆனால், அப்பகுதி இன்று இந்தியாவின் வசம் உள்ளதை நாம் மறுக்க முடியாது. ஒப்பந்தத்தை மதித்து, இந்த ஆக்ரமிப்பு மனப்பான்மையை இந்திய அரசு கைவிடுவதுதான் நல்லது.

காஷ்மீர், சியாசின் பிரச்சினைகள் சமுகமாய்ப் பேசித் தீர்க்கப்பட வேண்டியவை. எல்லைக் கோடுகள் முக்கியமானவைதான்; ஆனாலும் மக்கள் நலம் அதைவிட முக்கியமானது.

–உலகநாதன்

ஆசிரியர்: கு.நாராயணபாரதி, வெளியிடுபவர்: இ.இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம்.எஸ்.ரவீந்திரன், எஸ்.ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை - 600 005. முகவரி 1494, அண்ணாநகர், சென்னை - 600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# நடிகை ஷப்னா ஆஸ்மி என்ன பேசினார்?

பதவிக்கு வரும் ஆளுங்கட்சி எதுவானாலும், நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு மேடையேறி ஜால்ரா அடிக்கும் நம்மூர் கலைஞர்கள் பலரைத் கண்டு நாம் கூசி வரும் இவ்வேளையில்-

டெல்லியில், மத்திய அரசின் சார்பில் நடைபெற்ற திரைப்பட விழாவில் நடிகை ஷபனா ஆஸ்மி செய்த செயல் ஆச்சர்யகரமானது. முற்போக்கு நாடகக் கலைஞர் சஃப்தர் ஹாஷ்மி, காங்கிரஸ் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டதைத் துணிகரமாகக் கண்டித்து வீர உரையாற்றி விட்டு, வெளிநடப்பு செய்தார். அவர் உரையின் ஒரு பகுதி:-



நம்மில் ஒரு கலைஞன் படுகொலையுண்டபோது, அந்த உண்மையின் உறைப்பு இல்லாமல் மினுமினுப்பு ஆட்டம் நடத்துவதை விடக் கேவலம் உண்டா? எதிர்ப்பைத் தெரிவிக்காமலிருப்பது தவறில்லையா? ஒரு நடிகர் என்பதற்காக சஃப்தர் ஹாஷ்மி கொலை செய்யப்படவில்லை. வேறுபட்ட பார்வையுடையவர் என்பதற்காகவே கொலையானார். எதிர்ப்புக் குரல் வருவதையெல்லாம் அடக்க எவருக்கும் உரிமை கிடையாது.

நான் ஒரு செய்தியாளர் கூட்டத்தை ஏற்பாடு செய்து எதிர்ப்பைத் தெரிவித்திருக்க முடியும். ஆனால் இந்தச் சம்பவம்போல் அது மக்களுக்கு செய்தியை எடுத்துச் சென்றிருக்காது. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இந்த நிகழ்ச்சி அதிர்ச்சி அளித்தது போல் அதிர்ச்சியளித்திருக்காது. எனவேதான் இந்தச் சந்தர்ப்பத்தைத் தேர்வுசெய்தேன்.

இதனை என் சொந்த வெற்றி போல் விளம்பரப்படுத்திவிட்ட பத்திரிக்கைகளைக் கண்டிக்கிறேன். வேறு ஒரு மாதிரி கதாநாயகியாக என்னைக் காட்டிவிட்டார்கள். சப்தர் ஹாஷ்மியின் கொலை மீதும், அந்த அநியாயத்தின் மீதும்தான் முழுக்கவனமும் பதியும்படி செய்திருக்க வேண்டும். மாறாக

FREE E - BOOKS , www.thamizham.net.,

**தூசி தட்டி வாசித்தவை:**

## தலைமுறை மாறியது,
## வழி முறை மாறுமோ?

1952-ல் நடைபெற்ற முதல் இந்தியப் பொதுத் தேர்தலில் அன்றைய சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் 375 தொகுதிகளிலும் போட்டியிட்டது. காந்தி பேரைச் சொல்லிக் கழுதையை நிறுத்தினாலும் ஜெயிக்கும் என்று இரட்டைக்காளைச் சின்னத்தில் நின்ற காங்கிரஸ் 152 இடங்களில் மட்டுமே வெற்றி பெறமுடிந்தது.

பாரதப்பிரதமரும் காங்கிரஸ் மகாசபைத் தலைவருமான பண்டித நேருவை அப்போது டில்லியில் பேட்டி கண்ட பத்திரிக்கையாளர்கள் இது பற்றிக் கேட்டபோது அவர்கூறியது:-

சென்னை ராஜ்யத்தில் காங்கிரஸ் அல்லாத மந்திரி சபை அமர்ந்தால் நாட்டின் பிரதமர் என்ற முறையில் ஒத்துழைப்பேன். காங்கிரஸ் கட்சித்தலைவர் என்ற வகையில் ஒத்துழைக்கமாட்டேன்.

தகவல்: கம்பராயன்

ஆதாரம்:- தினமணி 26.2.52

---

*பத்திரிக்கையாளர்கள் என்னைப் பிரபலப்படுத்தி விட்டார்கள்.*

*எந்த நாடகமும் நடத்தப்பட்டபோது சப்தர் கொலை செய்யப் பட்டாரோ, அதே நாடகத்தில் நான் நடிக்க விரும்புகிறேன். அந்த நாடகத்தில் எனக்கும் ஒரு பாத்திரம் தரும்படி கேட்டுள்ளேன். நான் வீதிக்கு வர விரும்புகிறேன். பம்பாயில்கூட நான் வீதி நாடகங்களில் பங்கேற்க முடிவு செய்துள்ளேன்.*

*இனியும் நான் அரசியல் வேறு, வாழ்க்கை வேறு என்று இருக்கப்போவதில்லை. நான் அரசியலில் ஈடுபட எண்ணியுள்ளேன். ஆனால் அது கட்சி அரசியலாய் இருக்காது.*

இந்நிகழ்ச்சியின் காரணமாக வழக்கம்போல்

ராஜீவ் குருப் கம்பெனிகளில் ஒன்றான தொலைக்காட்சி இனி ஷப்னா நடித்த திரைப்படங்களைக் காட்டுவதில்லை எனவும் அவருக்கு டி.வி.யில் வாய்ப்புத் தருவதில்லை எனவும் முடிவு செய்துள்ளது.

கலை, இலக்கியத்தால் பிழைத்துக் கொண்டிருக்கிற நம் ஊர் எழுத்தாளர்களும், நடிகர்களும் இந்தத் துணிவுடன், நியாய உணர்வுடன், என்றைக்காவது கலைக்காகவோ, கலைஞனுக்காகவோ (கலைஞருக்காக அல்ல..) குரல் கொடுத்ததுண்டா..?

*த. கவிதாபாரதி*



FREE E - BOOKS , www.thamizham.net.,

# உணவும் மருந்தும் சேரும்போது - பிரச்சனை!

ஆங்கில மருந்துகளைச் சில உணவுப் பொருட்களுடன் சேர்த்து சாப்பிடும்போது பல எதிர் விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை பலர் அறிவதில்லை.

ஆஸ்பிரின் மாத்திரை சாப்பிட்டு மதுபானங்கள் அருந்தினால் வயிற்றில் புண்கள் ஏற்படும். பொதுவாக எந்த மருந்திற்குப் பின்னும் மது அருந்துவது ஆபத்தானது. சுவாச சம்மந்தமான நோய்களுக்குத் தரப்படுதும் 'டெட்ராசைக்கிளின்' காப்ச்சூல்களுக்குப் பின் பால் அருந்தினால், அம்மருந்து வேலை செய்யாது. பால் மட்டுமல்ல, தயிர், சீஸ் போன்ற பால் பொருட்களும், டெட்ராசைக்கிளினைச் செயலிழக்கச் செய்யும் சுண்ணாம்புச் சத்து கொண்டவை.

சோகை காரணமாக விழுங்கப்படும் இரும்புச் சத்து மாத்திரைகளுக்குப்பின் முட்டை, கோதுமை மாவிலான, மிகுந்த இரும்புச் சத்துள்ள உணவுப்பொருட்களை உட்கொண்டால், இரும்புச்சத்தை உடல் ஈர்ப்பது குறையும்.

மருந்துகளை எக்காரணத்தைக்கொண்டும் சோடா, காய்கறி சூப், அமிலச்சத்துள்ள பழம், காப்பி, டீ இவற்றுடன் உண்ணக்கூடாது. காரணம் இவை இரைப் பையில் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தைச் சரக்கச் செய்து மருந்தை சீக்கிரம் கரைத்து, குடல் உறிஞ்சிகளுக்குள் மருந்து செல்லாமல் தடுத்துவிடும்.

மிகுந்த இரத்த அழுத்தத்திற்குத் தரப்படும் மோனோஅமின் ஆக்சிடேஸ் (MAO) என்ற மருந்துடன் கோழி ஈரல், சிவப்பு நிற திராட்சைமது இவற்றை உண்டால் கடும் தலைவலி, இரத்தக் குழாய் வெடிப்பு, ஏன் மரணமே கூட நிகழலாம்.

விரைந்து செயல்புரியும் ஆங்கில அலோபதிக் மருந்துகள் பலவும் நோய்களைத் தீர்ப்பதோடு, புதிய தொல்லைகளையும், வைட்டமின் பற்றாக்குறைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன, என்பதை யாரும் மறுக்க முடியாது.

-சித்தன்


## சுட்டி இலவசம்

நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியைக் கேள்விப்படாத விரும்பி ஏற்கக்கூடிய புதியவர்களின் முகவரிகள் எவ்வளவு வேண்டுமாயினும் அனுப்புங்கள். உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம்.

# லெனின் நிழலில் "ஹரே கிருஷ்ணா"

(சென்ற மாதச் சுட்டியில் ஹரே கிருஷ்ணா ஆபத்து என்ற ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. அதன் தொடர்ச்சியாக இன்னொரு செய்தி!)

மறு சீரமைப்பு (பெரிஸ்த்ரோய்க்கா) வெளிப்படையான போக்கு (கிளாஸ்நோஸ்ட்) என்னும் பெயர்களில், சமீப காலமாக, சோவியத் பூமி மாறிக் கொண்டிருக்கிறது. மாற்றம் தேவைதான். ஆனாலும



அம்மாற்றம் கம்யூனிசக் கொள்கைகளை வலுப்படுத்துவதாக இல்லாமல், நீர்த்துப் போக வைப்பதாகவே தோன்றுகிறது.

அதன் விளைவாகத் தற்போது ரஷ்ய நாட்டிலும் ஹரே கிருஷ்ணா இயக்கம் உருவாகியிருக்கிறது. மக்களை மயக்கும் அபின். அங்கும் பரவத் தொடங்கியிருப்பது வேதனையல்லவா?

21-02-89 அன்று, கல்கத்தாவில் ஒரு விமானம் வந்து இறங்கியது. 59 பேர் சோவியத் நாட்டைச் சேர்ந்த ஹரே கிருஷ்ணா பக்தர்கள் அதில் வந்தார்கள். மிகையில் கோர்ப்பசேவிற்கு நன்றி கூறும் பேனர்களை அவர்கள் தூக்கிப்பிடித்திருந்தார்கள்.

எல்லாவற்றையும் விட வேதனை-. லெனின் சிலைக்குக் கீழே நின்று அந்த பக்தர்கள் கூத்தாடிய நிகழ்ச்சி! அவர்கள் கூத்தாடியது. லெனின் சிலைக்குக் கீழேயா? லெனின் சமாதிக்கு மேலேயா?

உறுப்புச்சட்டை



FREE E - BOOKS , www.thamizham.net.,

## உரிமை



■ மரங்களை வெட்டாதீர்கள் என்று
நான் சொல்ல மாட்டேன்
அவைகளுக்கு உயிர் உண்டு
என்ற போதிலும் ...

■ ஓலைகளைப் பறிக்காதீர்கள் என்று
நான் சொல்ல மாட்டேன்
இயற்கைக்கு
அவை எழில் சேர்த்த போதிலும் ...

■ கிளைகளை உடைக்காதீர்கள் என்று
நான் சொல்ல மாட்டேன்
கிளைகளே
மரங்களின் கரங்கள் என்றாலும்

■ ஏனென்றால்
எனக்கு
ஒரு குடிசை வேண்டும்

-தெலுங்கில்-செரபண்டராஜு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சாலை விபத்துகளுக்கு யார் காரணம்?

விரைவாக வாகனம் ஓட்டுவதால் விபத்து ஏற்படுகிறது. சாலை விதிகளைப் பின்பற்றத் தவறுவதால் விபத்து நேர்கிறது. மஞ்சள் கோட்டைத் தாண்டுவதால் சாலை ஆபத்து ஏற்படுகிறது ஹெல்மெட் போடா விட்டால் மரணமே நிகழ்கிறது.

எல்லாம் சரிதான். வாகன ஓட்டிகளும், வாகனங்களுமே விபத்துக்குக் காரணம் என்பது போல மேற்கண்ட எச்சரிக்கைகளைத் திரும்பத் திரும்பப் போக்கு வரத்துக் காவல் துறையும், அவர்களுக்கு உதவுவாகச் சொல்லி விளம்பரம் தேடும் நிறுவனங்களும், விளம்பரும் செய்து வருகின்றன.

விபத்துகளுக்குக் காரணமான இன்னொரு பககத்தை இவர்கள் இருட்டடிப்புச் செய்வது ஏன்? உண்மையை மறைப்பது ஏன்?

தெருவிளக்கு எரியாததால் விபத்து ஏற்படுகிறது. சாலைகள் சரியாகப் போடாததால் விபத்து ஏற்படுகிறது. கண்ட கண்ட இடங்களில் மேடுகளையும், பள்ளங்களையும் ஏற்படுத்துவதால் விபத்து ஏற்படுகிறது. நட்ட நடுத் தெருவில் பாதாள சாக்கடையைத் திறந்து வைப்பதால் விபத்தும், மரணமும் நிகழ்கிறது. மாடுகளையும், நாய்களையும், பன்றிகளையும் சுதந்திரமாகத் தெருவில் அலைய விடுவதைத் தடை செய்யாததால் ஆபத்துகள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

தனிமனிதர்களை மட்டும் எச்சரித்து விடுவதால் மட்டுமே விபத்துகள் குறைந்து விடாது. விபத்துகள் அவர்களால் மட்டும் ஏற்படுவதாகக் காட்டுவது ஏமாற்று வேலை. இன்னும் சொல்லப்போனால் அடுக்கடுக்காக விபத்துகள் நிகழ அரசின் அஜாக்கிரதைகளே காரணமாகின்றன. தெரு விளக்கை எரிய விடு! நடுத்த தெருவில் பள்ளம் தோண்டி விட்டுப் பொறுப்பற்று போகாதே! போன்ற எச்சரிக்கை வாசகங்களையும் தெருவெங்கும் வைக்க வேண்டும். வைப்பார்களா? வைக்க அனுமதிப்பார்களா? —ஏ. ஆர். நாராயணன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆசியா:

# பூட்டான்



தம்மை நாகரிகமடைந்த தாகக் காட்டிக் கொள்ளும் நாடுகளின் பார்வையில் பூட்டான் மிக ஏழைநாடு. ஏனெனில் இங்கு சராசரி தனி நபர் ஆண்டு வருவாய் 85 அமெரிக்க டாலர் தான் (இந்தியா: 217) ஆனால் இங்குப் பட்டினி இல்லை; வேலையின்மை இல்லை; பிச்சைக்காரர் இல்லை. சமூக குற்றங்கள் அறவை இல்லை.

இந்நாட்டின் சொத்து இதன் இனிய, விருந்தோம்பல் மிக்க மக்களே. புன்னகையே இவர்கள் எப்போதும் அணியும் நகையாகும். போலிஸ்காரரிடம் கூடக் கனிந்த புன்னகையைக் காணலாம்.

இதன் 50,000 ச.கிலோ மீட்டர்களில் 15 லட்சம் மக்களே உள்ளனர். மொத்த நிலப்பரப்பில் 9% நிலமே சாகுபடி; 70% காடுகள். இளைஞர்கள் பலரும் பௌத்த பிக்குகளாக மாறுவதால் நிலத்தைச் சொந்தமாக்கும் மண்ணாசை இல்லை.

1960 களின் இறுதியில் தான் இங்கு பணமே அறிமுகமானது. அதுவரை பண்டமாற்று முறை தான். இன்னும் கூட பல விடங்களில் பண்டமாற்றே உள்ளது. 1907 வரை பிக்குகள் கையிலிருந்து ஆட்சி பின்னர் மன்னர் கைக்கு மாற்றப்பட்டது தொடர்ந்து நடந்து வரும் மன்னராட்சியில் தற்போது 32 வயது இளைஞர் ஜிம்மி சிங்யே வான்சுக் மன்னராக ஆள்கிறார். இவர் மிகச் சிறந்த கால்பந்தாட்டக்காரர்.

1300 மடாலயக் கோட்டைகள் புறநகர்களைக் கட்டுப் படுத்துகின்றன. 70% பௌத்தர்கள். குடும்பத்தின் அறிவான குழந்தை 3 வயதில் கூட-மடாலயக் கோட்டைக்கு அனுப்பப்பட்டு துறவியாக்கப்படுவது கண்கூடு.

கிராமங்கள் மிக ஏழ்மையாக இருந்தும், மிகத்தூய்மையாக உள்ளன. ஏழ்மையும், தூய்மையும் ஒன்றிணைய முடியாது என்ற கூற்றைப் பூட்டானிய கிராமங்கள் பொய்யாக்குகின்றன. எங்கும் சுத்தம், எங்கும் அழுகுணர்ச்சியுடைய ஜோடனைகள்.

ஒரே கல்லூரி; 8 உயர்நிலைப்பள்ளிகள்; 3 மருத்துவமனைகள். கல்வி பெரும்பாலும் சேக சபை

FREE E - BOOKS , www.thamizham.net.,

குருமார்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. விவசாயமே பெருந்தொழில்; வணிகமும், நிர்வாகமும் இப்போது தான் லேசாக நுழைந்துள்ளன. அரசு குடும்பமே முழு வணிகத்தையும் கட்டுப்படுத்துகிறது. நாட்டில் வருமான வரியே இல்லை. ஆனால் நிறைய செலவாகும் மதுவிற்கு மட்டும் வரி உண்டு. சுற்றுலாத்துறையாலும் வருமானம் வருகிறது. பூட்டான் அஞ்சல் வில்லைகளுக்கு நிறைய மதிப்பு இருப்பதால் (சில முப்பரிமாணமானவை) ஆண்டுக்கு 5 லட்சம் டாலர் இதனாலேயே கிடைக்கிறது. 1983 இல் கிடைத்த மொத்த அந்நிய செலவாணி தேசிய விமான கம்பெனியின், 17பேர் உட்காரும் 2வது விமானத்தை வாங்கவே சரியாகப்போயிற்று.

இந்தியர்கள் இங்கு வணிக ஒப்பந்தக்காரர்களாகவும், காடுகளை அழித்து மரத் தொழிற்சாலை நடத்துபவர்களாகவும் உள்ளனர். இந்தியர்களைத் தில்லுமுல்லு செய்து, வெட்கங்கெட்ட முறையில் லாபம் சம்பாதிக்க எண்ணுபவர்கள் என்று இம்மக்கள் சந்தேகத்துடன் பார்க்கின்றனர். ஆனாலும் ஆல் இந்தியா ரேடியோவும், இந்திய செய்தித் தாள்களுமே இவர்களின் ஒரே செய்தித் தொடர்பு. பூட்டான் நேரம் இந்திய நேரத்தை விட அரை மணி முந்தி; இருப்பினும் கிராமத்து பூட்டானியர் இந்திய வானொலி நேரத்தையே பின்பற்றுகின்றனர்.

இந்திய-திபெத்-பூட்டான் சந்திக்கும் யாலுங் கிராமத்தினர் இன்னும் சக்கரத்தைக் கூடப் பார்த்ததில்லை. நாம் 21 ஆம் நூற்றாண்டில் நுழையும் இந்நேரத்தில் பூட்டான் 20 ஆம் நூற்றாண்டிற்கே வந்து சேரவில்லை.

பின்தங்கிய போதிலும் வெளியுலகத் தொடர்பில் பூட்டான் எச்சரிக்கை காட்டுகிறது. 1500 பயணிகளே ஆண்டுக்கு அனுமதி. இமய மலை ஏறுவதாக வெளி நாட்டினர் வந்தால் சொந்தப் பொருட்களை, கருவிகளை சுமந்து கொண்டு வரவேண்டும். பூட்டானியர்களைப் போர்டர்களாக்க, கூலிகளாக்க அனுமதியில்லை.

-உலகப்பன்.

## வருந்துகிறோம்

சுட்டி வெளியீட்டாளரின் நிர்வாகத்தில் அச்சமைப்பாளராகப் பணியாற்றும் செல்வி. தெ. லட்சுமி அவர்களின் அன்புத்தந்தையார் திரு. த. தெய்வசிகாமணி நாயக்கர் 14-3-89 விடியற்காலை தனது இல்லம் 28, வாங்ஸ் கார்டன் தெரு, புதுப்பேட்டை, சென்னை-2 இல் திடீரென காலமாகியதற்கு வருந்துகிறோம். அவரின் நினைவால் வாடும் அவரது குடும்பத்தினர் அனைவர்க்கும் சுட்டி ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

கிராமத்து கீதம் (1-00) கவிதைகள் - தொகுப்பாசிரியர்கள். எம். சோலைப்ரியன், க. ஜெயசீலன் - எம். சோலைப்ரியன், தலைவர், கவிப்பேரரசு கண்ணதாசன் கழகம், அப்பாசித் தெரு, ச. கோடியூர் ஜோலார்பேட்டை - 635 851 வ.ஆ.

பாரதியின் ஞானகுரு நிவேதிதா (5-00) கட்டுரை ஆசிரியர். டி. ராஜசேகர் - ஜனனி C/o த. ராஜசேகரன், 52, பெத்தநாயக்கன்தெரு, மின்ட், சென்னை - 600 079.

அணுசக்தி - ஓர் அறிமுகம் (5-00) - பூவுலகின் நண்பர்கள் வெளியீடு - நெடுஞ்செழியன், 306/6 பெல்லி ஏரியா, அண்ணா நகர், சென்னை - 600 040.

புதிய பூக்கள் மலரட்டும் (5-00) கவிதைகள் - ஆசிரியர் வில்லவன் - சிறுமலர் பதிப்பகம், கொடுங்குளம், மார்த்தாண்டம் (po) - 629 165, குமரி மாவட்டம்.

நிமிர்ந்த நாணல்கள் (5-00) கவிதைகள் - ஆசிரியர் செல்வபாரதி. கண்கள் பதிப்பகம், 145, மருத்துவமனை சாலை, ஊத்துக்குளி - 638 751.

லங்காபுரி ராஜா (15-00) குறுநாவல்கள், சிறுகதைகள் - ஆசிரியர் பிரமிள்-லயம் வெளியீடு, நகலூர், அந்தியூர் - 638 501.

பாரதியாரும் ரஷ்யப்புரட்சியும் (8-00) ஆசிரியர். புலவர். அ.ப. பாலையன். எம்.ஏ.எம்.எட். மாறன் வெளியீட்டகம், விடங்கலூர், வலிவலம் - 610 207.

அமுதசுரபி தமிழ்-ஆங்கில அகராதி (ஒருமை பன்மை) (16.00) - தொகுப்பு. கா.ப. பாரி யமுனைப்பதிப்பகம், 19, பெரியதெரு, திருவண்ணாமலை.

பாசிச எதிர்ப்பு இயக்க மாநாட்டுச் சிறப்புமலர் (12.00) - கேடயம், த.பெ.எண்.2480 11, வட அகரம் 2வது தெரு, மேத்தா நகர், சென்னை-29.

சனங்களின் கதை (7.50) - கவிதைகள் - பழமலை - சிலிக்குயில், 20, ப. கோதண்டபாணித் தெரு, கும்பகோணம் - 612 001.

கூடங்குளமா? கொலைக்களமா? (3.00) அ.ஜ. கான் - 20, ப. கோதண்டபாணித் தெரு, கும்பகோணம் - 612 001.

பாதையாகும் பாறைகள் (12.00) - வாழ்க்கை முன்னேற்ற வழிமுறைகள் - டாக்டர். க.ப. அறவாணன், ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, சென்னை - 600 005.

THE SURPENT CULT (50.00) Dr. K. P. Aravananan, Ainthinai Pathipagam, 279, Bharathi Salai, Madras - 600 005.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தமிழின மீட்சி
## - ஒரு வரலாற்றுப் பார்வை

[ஆசிரியர்: குணா, வெளியீடு: தமிழக ஆய்வரன் 48, DISPENSARY ROAD, BANGALORE - 560 001, பக்:40, விலை: ரூ.4.00]

❒ மறைத்திரு. இராபர்ட் கால்டுவேல் அய்யர் (1819-81) அவர்களும், ஃசியு. போப் (1820-1907) அவர்களும் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பற்றி ஆராய்ந்து சொன்ன கருத்துகள் தாம் இன்றைய தமிழகத்தில் மொழியுணர்வும் தமிழின உணர்வும் தோன்றுவதற்கான அடிப்படைகளாக இருந்தன.

❒ டாக்டர். பி. வரதராசலு நாயுடு தான் 1917 ஆம் ஆண்டில் முதன் முதலாக வடார்க்காடு மாவட்டத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் முழுவதும் தமிழிலேயே உரையாற்றி வரலாறு படைத்தவர். பொதுக் கூட்டங்களில் தமிழை ஆள்வதற்கு வெள்ளோட்டம் விட்டவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு தெலுங்கர் தான் என்பது ஒரு புதிர் தான்!

❒ திராவிடக் கொள்கைக்கு அப்பால், தமிழர்கள் ஒருநாடு என்னும் தேசியக் கொள்கை முதல் முதலில் கருவெடுத்தே பெரும்பாலர் சி. சுப்பிரமணிய பாரதியிடம் (1882-1921) தான் என்பதும் ஒரு புதிராகும் சங்கதத்திற்கு (சமற்கிருதத்திற்கு) முதலிடத்தைத் தருகிற பார்ப்பனர் குழுகத்திலிருந்து வந்தவரானாலும், அவர் காட்டிய தமிழுணர்ச்சி நெஞ்சைக் கவரவல்லது.

❒ பார்ப்பனரல்லாதார் இயக்கத்துடன் அவ்வளவு தொடர்பில்லாத பார்ப்பனரல்லா மலையாளியாகிய சி. சங்கரன் நாயர் என்பவர்தான் தமிழர்கள் யாவரும் ஒரு தனிநாடாக இருப்பதை முதன் முதலில் வெளிப்படுத்தினார் என்பதும் மற்றொரு வரலாற்றுப் புதிராகும்.

❒ தமிழர்களை மட்டுமே பார்பனர் - பார்ப்பனரல்லாதார் எனத் தெலுங்கர்களும் மலையாளிகளும் பிளவுபடுத்தினர். உள்ளபடியே, தமிழ்ப் பார்ப்பனர்களை அரசு பதவிகளிலிருந்து இறக்கிவிட்டு பார்ப்பனரல்லாத் தெலுங்கர்களும் மலையாளிகளும் அந்த இடங்களில் தாங்களே போய் அமர்வதற்கான ஒரு நொண்டிச் சாக்காகவே அப் பார்ப்பனர் எதிர்ப்பு இருந்தது.

❒ திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டமே ஆங்கிலம் இந்தியாவின் இணைப்பு மொழியாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும் அடிப்படையில் தான் உள்ளபடியே தொடங்கியது. தமிழகத்தில் எல்லாமே தமிழாகத்தான் மணக்க வேண்டும் என்னும் அடிப்படையில் இல்லை.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## குனிந்த தலைகள் நிமிரட்டும்!

அன்புள்ள ரேவதி,

பெண்கள் தலைகுனிந்தே நடக்கவேண்டிய அளவிற்கு எங்கும் ஆபாசப் போஸ்டர்கள்' என்று நீ எழுதலாமா? பூங்கொடிகளல்ல நாங்கள் போர்க்கொடிகள். நிலவென்று பெண்களை வருணித்தது போதும் சுட்டெரிக்கும் சூரியன்கள் நாங்கள்' என்றெல்லாம் கல்லூரி மேடைகளில் முழங்கிய ரேவதியா இப்படி எழுதுவது?

ஆபாசப் போஸ்டர்களை எதிர்த்து இயக்கம் நடத்தவேண்டிய நீ, தலைகுனிந்து நடக்கவேண்டியிருக்கிறது என்று தடுமாறலாமா? இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் குனிந்த தலைகள் இனிமேலாவது நிமிர வேண்டாமா?

கல்லாய்க் கிடந்த அகலிகை, கணவனைத் தாசி வீட்டிற்குத்தோளில் சுமந்த நளாயினி, நெருப்பில் குதித்துத் தன் கற்பை நிருபித்துக் கொண்ட சீதை, இருக்கும் சிலம்பையும் விற்று, இன்னொருத்தியிடம் தன் கணவனை அனுப்பத் தயாராயிருந்த கண்ணகி இப்படிப் பெண்ணடிமைத் தனத்தைப் பெருமையாய்ச் சொல்லும் புண்ணிய பூமி யைப் புதுப்பிக்க வேண்டிய ரேவதிகள், ஆபாசங்களைக் கண்டு அருவருப்படைந்தால் எப்படி? ஆவேசப்படு-அக்னிக் குஞ்சை அத்தனை பெண்களின் நெஞ்சிலும் ஏற்று!

தலைகுனிந்து நடக்க வேண்டியவர்கள், ஆபாசப்போஸ்டர்களை ஒட்டிய அற்பர்கள் மட்டுமே! நாம் தலை நிமிர்ந்து நடப்போம். ஆம் இது உங்கள் போராட்டமன்று; நம் போராட்டம்.

தோழமையுடன்,
பாண்டியன்.

## சின்னஞ் சிறுகதைப்போட்டி முடிவுகள்:

முதற்பரிசு: ரூ 100
சூரிய பாலன் (ப.பாலசுப்பிரமணியன்)
மே/பா. ஆர். முஸ்தாக், 1/3 மிர்ஸா ஹைதர் அலிகான் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014

இரண்டாம் பரிசு: ரூ25 (தேர்ந்து வெளிடப்படும் அனைத்துச் சிறுகதைகளுக்கும் உண்டு)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# புதுக்கவிதைப் போட்டி

## 'ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல'

மேற்கண்ட தலைப்பில் கவிஞர் சேஷாசலம் எழுதிய கவிதை நூல் கண்ணில்பட்டது. சிந்தனையைத் தூண்டும் இத்தலைப்பையே இப்போட்டிக்குப் பாடு பொருளாக் கியுள்ளோம்.

முதல் பரிசு: ரூ.100

இரண்டாம் பரிசு: ரூ.25

தேர்ந்து வெளியிடப்படும் அனைத்துக் கவிதைகளுக்கும் இரண்டாம் பரிசு உண்டு.

சுட்டி 98 வாசகர்

விதிகள்: ● கவிதை மனித முயற்சியை ஊக்குவிப்பதாக அமைதல் வேண்டும் 15 வரிகளுக்கு மிகாமல் கவிதை விளங்க வேண்டும்

● இப்போட்டி சுட்டி வாசகர்களுக்கு மட்டுமே, எனவே பக்கத்தில் உள்ள வாசகர் வில்லையை கத்தரித்து அனுப்புதல் அவசியம். ● எத்தனை கவிதைகளையும் ஒருவரே அனுப்பலாம். ஒவ்வொரு கவிதையுடனும் வெட்டிணைப்பு அவசியம். ● கிடைக்க வேண்டிய இறுதி நாள்: 29-4-89 ● ஜூன் 89 இதழில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும் உறைமேல் புதுக்கவிதைப் போட்டி எனக் குறிப்பிடுங்கள்.

இரு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்புதுச் சுட்டி வாசகர் போட்டிகளை எதிர்பாருங்கள். அடுத்த போட்டி அறிவிப்பு: மே 89 இதழில்.


### சுட்டி சந்தா

12 இதழ்களை அஞ்சலில் பெற ரூ 12 பணவிடை (M.O) செய்யுங்கள். ஒவ்வொரு இதழையும் தவறாமல் பெற சந்தா தாரராவதே சரியான வழி

முகவரி: சுட்டி, AP-638, H பிளாக், அண்ணா நகர், சென்னை-600 040.

### சுட்டி முன் இதழ்கள்

நீங்கள் படிக்காமல் விட்ட சுட்டியின் முன் இதழ்களையும் படிக்கலாமே இதழ் எண்:72 முதல் முன் இதழ்களைப் பெற இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O) அனுப்பினால் உடனே அஞ்சலில் வந்து சேரும்.




FREE E - BOOKS , www.thamizham.net.,

பதிவு எண்: TN/MS (N) 317

புகைப்படம்: எஸ். சேஷகிரி




http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்நூல்கள்

கட்டிட AP638, H.பிளாக், அண்ணா நகர், சென்னை 600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,